ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO. 4642.

# திராவிடநாடு

மலர் 11. 24—8—52 இதழ் 8.

# கவர்னர் பெருமான் கண்ட காட்சிகள்!

குமாரி கமலாவின் பரத நாட்டியம்! இரண்டாயிரம் பிரமுகர்களுக்கு விருந்துபசாரம்!!—இவ்விதம், ஆகஸ்டு பதினைந்தை ஆனந்தத்தோடு கழித்த கவர்னர் பெருமான் மறுநாள் காலை, சிங்காரமான தமது காரில், நகரப்பிரவேசம் செய்திருக்கிறார். சிற்றூர் போலிருக்கும் 'ராஜ்ய பவனம்' மாளிகையைவிட்டு சென்னை நகரின் சில பகுதிகளுக்கு 'விஜயம்' செய்தாராம். விஜயத்தின் போது விழிக்கு விருந்து எதுவும் கிடைக்காதது மட்டுமல்ல, கடுமொழிகள் சிலவும் கேட்க நேரிட்டதாம். சீமான், "திரு"க்கள் உலவும் தியாகராய நகர் சென்றிருக்கிறார்! பிறகு, மவுண்ட் ரோடு பக்கமும் போயிருக்கிறார்! இரு பகுதிகளிலும், அவரது கண்ணுக்கும் காதுக்கும் விருந்து கிடைக்கவில்லை! சிந்தைக்கு மருந்து கிடைத்திருக்கிறது!! ஆயாசமும் சோகமும் முகத்தில் படர, வேதனையோடு; திரும்பினாராம். சுதந்திர நாள் கொண்டாடிய குதூகலத்தில் செல்லுமிடமெங்கும், சிருங்கார கீதமும், இன்ப நாதமும் தம்மை எதிர்கொண்டழைக்கும் என்று சென்றார் போலும்! தேன் காட்சி காணச்சென்ற இடத்தில் 'தேள்' கொட்டியிருக்கிறது அவரது இதயத்தில்!! திகைத்துப் போனது மட்டுமின்றி, "மிகவும் வருந்துகிறேன் இந்தக் காட்சிகளைக் காண" என்று, சோர்ந்து போய் அமர்ந்தாராம், காரில். துக்கித்தாராம்! அந்த அளவுக்கு அவர் கண்ட காட்சிகள் என்ன தெரியுமா? தியாகராய நகர் சென்றிருக்கிறார். அங்கே தொழில் மந்திரி காரியாலயத்தின் சார்பில் நடத்தப்பெறும் கைத்தொழில் பயிற்சிக் கூடம் நோக்கிச் சென்றிருக்கிறார். இளம் வாலிபர்களுக்குத் தச்சுத் தொழில், தட்டார வேலை, கடிகார ரிப்பேர் செய்யும் விதம், மூலாம் பூசுதல், ரேடியோ ரிப்பேர், முதலிய சில்லரை வேலைகள் அங்கே கற்றுத் தரப்படுகின்றன. கவர்னர் பிரான் சென்றபோது, வீட்டுக் கவலை ஒரு கண்ணிலும் வயிற்றுப் பசி மற்றோர் கண்ணிலுமாக தத்தமது வேலைகளில் ஈடுபட்டிருந்திருக்கின்றனர், இளைஞர் குழாம். வியர்வை வடிந்திருக்கிறது, அவர்கள் முகத்தில்! வேதனையோடு சம்மட்டியோடும் இயந்திரங்களோடும் போராடிக் கொண்டிருந்திருக்கிறார்கள். இந்தக் காட்சியைக் கண்டிருக்கிறார் கவர்னர். அவர் எதிர்பார்த்து வந்தது இதையா? அல்ல! அல்ல!! ஆனால், என்ன செய்வது? வயிற்றுப் பிழைப்புக்கு பிஞ்சுடலை வருத்தி உழைக்கும் அந்த இளைஞர்களிடையே நாட்டியத்தையும் நல்லிசையையுமா காண முடியும்! காலிலே சுத்தியல் வீழ்ந்ததால் காயமாக, அதனால் சரியாக நடக்க முடியாது தவிப்போர் தானே தென்படுவர். அந்த 'நடனத்தை'த்தானே அங்கு காணமுடியும்? குமாரி கமலாவின் உருவும் திருவும், சலங்கைச் சப்தமும் அங்கே காணக் கிடைக்குமா! கூச்சலும் இரைச்சலும் தானே 'இந்த உலகின்' இசையும் கூத்தும்!! சுதந்திர நாளைக் குதூகலமாகக் கொண்டாடிய கவர்னர் பிரகாசாவின் கண்களில், அந்த இளைஞர்கள் படும்கஷ்டம் தென்பட்டிருக்கிறது. ஆயாசம் வந்தது போலும், வயிற்றுக்காக இந்த வேலைகளைக் கற்றுக் கொள்ளும் அவர்களைக் கண்டதும். பலரைக் கூப்பிட்டு பலப்பல கேள்விகளைக் கேட்டாராம். கைத்தொழில் சம்பந்தமாக அல்ல! வாழ்க்கை சம்பந்தமாக!! வாடிய முகம்கொண்ட அந்த மாணவர்கள், வேதனையோடு, பதில் தந்திருக்கிறார்கள் :

கவர்னர்:- இந்த வேலைகளைக் கற்றுக்கொண்டதும் என்ன தம்பி செய்யப்போகிறாய்?

மாணவன்:. வயிற்றுப் பிழைப்பைத் தேடவேண்டியது தான். வேறென்னங்க செய்யப்போகிறேன்? ஏதாவது உழைத்துச் சம்பாதிக்கணும். அதுக்குத்தானே, இதையெல்லாம் கற்றுக்கொள்கிறோம்.

எல்லோருமே, இவ்விதம் தான் பதில் கூறினராம்! "18 மாதங்கள் இந்தப் படிப்பு – இது முடிந்ததும் வேலை தேடி அலையவேண்டும்" என்று, அவர்கள் விரக்தியோடு தந்தபதில், விருந்து உண்டகளைப்புத் தீராத அவர் இதயத்தில் விஷத்தைப்பெய்திருக்கிறது. சந்தோஷம் ஏற்படவா முடியும், சாதாரண பிஞ்சுடல்கள் படும் வேதனையைக் காணும்போது? இந்தசோகக்காட்சியைக்கண்ட கவர்னர்,கைத்தொழில் டைரக்டர் காதிர் என்பவரை நோக்கிக் கேட்டாராம். "டைரக்டர்! எவ்வளவு வேதனையாயிருக்கிறது; இந்த வேலைகளை இவர்கள் கற்றுக் கொள்வதைவிட, அவரவர்களும் ஏதாவது வியாபாரத்தில் ஈடுபட்டால் எவ்வளவு பயன் தரும்!"

"ஈடுபடலாம் — முதல் தேவையில்லையோ, வியாபாரம் நடத்த"

"ஆமாம். உண்மைதான். என்ன செய்வார்கள் பாவம்"

இந்த அளவோடு, நின்று போய்விட்டது கேள்வியும் பதிலும்! வாழ்க்கையின் மேடுபள்ளங்கள், அந்தச்சின்னஞ்சிறு உடல்களில் பதிந்திருக்கும் காட்சி கல் நெஞ்சையும் கரையவைக்குமே! சரியான உடைகள் இல்லாமல், எலும்புக் கூடுகளாய், தலைவிரி கோலத்துடன் 'சம்பாதிக்கணும்' என்ற ஒரே நோக்கத்தோடு,உடம்பை உருக்கிக் கொள்ளும் அந்த மாணவர் கூட்டத்திலிருந்து ஒரு பையனை அழைத்து, விசாரித்தாராம் பிரகாசா.

"நீ, எந்த ஊரப்பா?"

"சேலம் – ஏழை நெசவாளியின் மகன்"

"இந்தப் பயிற்சி முடிந்ததும்..."

"18 மாதங்கள் ஆகுமே..."

"ஆமாம்! அதற்குப் பிறகு, நீ எப்படியிருக்கிறாய், எந்தவேலை கிடைத்தது என்பதை விளக்கி எனக்கு எழுதுகிறாயா?"

"எழுதுகிறேன்—ஆனால் உங்களுக்கு எனது ஞாபகம் இருக்க வேண்டுமே"

"இன்று நீயும் நானும் சந்தித்ததைக் குறிப்பிட்டு எழுது"

கவர்னர் பிரகாசா ஒரு எழுத்தாளர் என்று கேள்வி. ஒருவேளை, 'இந்த அனுபவங்கள்' தனது எழுத்தோவியங்களுக்கு பிற்காலத்தில் பயன்படலாம் என்று கருதி, இவ்வண்ணம் தெரிவித்தாரோ என்னவோ, எதுவாயினும் தியாகர்நகர் காட்சிகள் அவர் சிந்தையைக் குழப்பியிருக்கத்தான் வேண்டும். சோகமுகத்தோடு, மெருகு குலையாத தனது காரை, மவுண்ட்ரோடு பக்கம் செலுத்திக்கொண்டு, சர்க்கார் நடாத்தும் வேலை தேடித் தரும் ஸ்தாபனம் (Employment Exchange) நோக்கிச் சென்றிருக்கிறார். வேலைக்குப்போக விரும்பும் கும்பலைக் கண்டுவிட்டு, வேலைத் தரும் ஸ்தாபனம் நோக்கிப் போயிருக்கிறார். அங்கு அவர் கண்ட காட்சிகள், தியாகர்நகரை மிஞ்சிவிட்டதாம்! 'வேலை தேவை' என்று நாடி வரும் பெரும் கும்பல் அங்கு நின்றுகொண்டிருந்ததாம்!! கவர்னர் அங்கு தவித்துக்கொண்டிருந்த ஒரு இளைஞனைக் கூப்பிட்டு விசாரித்தாராம். "உலர்ந்த உருவம்! வயது 19 இருக்கும்" என்று அவனைப்பற்றி விளக்குகிறது "இந்து" இதழ்.

"நீ ஏனப்பா நிற்கிறாய்?"—கவர்னரின் கேள்வி இது.

"வேலை வேண்டும் — அதற்காக வந்தேன். ஒரு பியூன்வேலைகிடைத்தால்போதும். அதைக்கொண்டு காலம் கடத்திவிடுவேன். அதற்காக இங்கு வந்து அலைகிறேன், ஒரு வருடமாக அலைகிறேன். ஆனால், இன்னும் கிடைக்கவில்லை. நான் ரொம்ப ஏழை. ஒருநாள்கூட வேலை கிடைக்கவில்லை. திண்டாடித் தவிக்கிறேன்" என்று தெரிவித்தானும் அவன்.

"இது, உண்மையா?" என்று கேட்கும் பாவனையில், மேற்படி ஸ்தாபன உத்தியோகஸ்தர்கள் பக்கம், திரும்பியிருக்கிறார், கவர்னர். கவர்னர் பார்வையைக் கண்ட அதிகாரி, பழக்கமான பதிலைத் தெரிவித்திருக்கிறார்.

"இந்தப் பையனைப்போல ஏராளமானபேர் வருகிறார்கள். கலபமா, ஏதாவது வேலை கிடைக்கணுமாம்! உடம்பை அலட்டிக்கொள்ளாமல் வேலை செய்யணுமாம். என்ன செய்வோம் நாங்கள்?"

இந்தப் பதிலைக்கேட்ட கவர்னர், பையன் பக்கம் திரும்பி,

"ஏம்பா! தோட்டவேலை கொடுத்தால் செய்வாயா?" என்று கேட்டிருக்கிறார். பையனும், "எதுகிடைத்தாலும் போதும்" என்று வேதனையோடு பதில் கூறியிருக்கிறான். கவர்னர் வந்திருக்கிறார் என்பதைக் கண்டதும் காத்திருந்த கும்பல் அவரைச் சூழ்ந்துகொண்டதாம்!

"ஐயோ. ரொம்ப கஷ்டப்படறோங்க..."

"மூணு வருசமா, அலையரேன் ஒரு வேலையும் கிடைக்கலே"

"சாகவேண்டியதுதானா, நாங்கள்?"

"தவிக்கிறோம் ஐயா, தவிக்கிறோம்!"

இவ்விதம், ஏககாலத்தில் ஏராளமான சொல்லம்புகள், சுதந்திரநாள் கொண்டாடிவிட்டுவந்த கவர்னரின் காதுகளில் பாய்ந்திருக்கின்றன. திகைத்திருக்கிறார், கவர்னர்! "இந்த நிலையைக் காணும்போது, காடுகளை அழித்து நிலமாக்கி, சர்க்கார் சாகுபடித் தொழிலை மேற்கொள்ளலாம். நான் வசிக்கும் ராஜபவனத்தில் 1900 ஏகர் இருக்கிறது" என்று தெரிவித்தாராம்!! "தண்ணீர் வேண்டாமோ?" என்று கேட்டிருக்கிறார் ஒரு அதிகாரி. "எப்படியாவது கொண்டுவரத்தான் வேண்டும்" என்று சோகத்தோடு பதில் தந்துவிட்டு, பெண்கள் பலர் நிற்பதைக் கண்டு அங்கு சென்று விசாரித்திருக்கிறார். அத்தனை பேரும் வேலைக்காகவந்து அலைபவர்கள்! அதில் பலர் இன்டர்மீடியட், பி. ஏ. பாஸ் செய்தவர்கள்!! அவர்களும், தமது நிலையையும், குடும்ப அவஸ்தையையும் கூறியிருக்கின்றனர். கவர்னர் காதுகளில் இந்தக் குரல்

(-2ம் பக்கம் பார்க்க)

## கூறுவீர்!

### வருமானம்



'டில்லி' சர்க்காருக்கு மாகாணங்களிலிருந்து சென்றுகொண்டிருக்கும் வரிகளின் விபரத்தையே, இந்த வரைப் படம் காட்டுகிறது. டில்லி பொக்கிஷத்துக்குப் போய்ச் சேரும் வரி இனங்களில் எது அதிகமாயிருக்கிறது பாருங்கள்? இந்த வரி இனங்களில்தான் நமக்கும் 'பங்கு' வேண்டுமென, ஆச்சாரியார் சர்க்கார் கோரியிருக்கிறது! 'பங்கு' வருமோ, வாராதோ — அது எதிர்காலத்தில், விளங்கும். இந்தப் 'பங்கு' கிடைப்பதற்குப் பதில் இந்த இனங்களில் வரும் அவ்வளவு பணமும் நமது மாகாண கஜானாவில் சேர்ந்தால் எவ்வெவ்வளவு நன்மைகளைச் செய்துகொள்ளலாம். சிந்தித்துப் பாருங்கள்! இந்த எண்ணத்தைத்தானே 'திராவிட நாடு' கோரிக்கை குறிக்கிறது. கண்ணிரண்டை விற்றுச் சித்திரம் கேட்பது அழகாமோ? அறிவுடைமையாமோ?

திராவிடநாடு

காஞ்சி] 24—8—52 [ஞாயிறு

# புனுகு பூச்சு போதாது!

★

புரையோடிக் கொண்டிருக்கும் புண்ணுக்கு புனுகு பூசுவதுபோல வெங்கட்ராமன் எனும் காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர், தஞ்சை நிலப் பிரச்னை சம்பந்தமாக, சில தகவல்களை சமர்ப்பித்துள்ளாராம்—தமிழ் நாட்டுக் காங்கிரசுக்கும், சென்னை சர்க்காருக்கும். அதை விளக்கி, அத் தோழர், செய்த பிரசங்கம் ஒன்றை வைத்து, தேசிய இதழ்கள் யாவும் தலையங்கங்கள் தீட்டிவிட்டன. தஞ்சைத் தொகுதியிலிருந்து டில்லிக்குச் சென்றிருக்கும் அத்தோழரின் யோசனைகளைப் பத்திரிகைகளில் கண்டபோது, ரோம் தீ பிடித்து எரிந்தபோது பிடில் வாசித்துக்கொண்டிருந்த நீரோ மன்னனின் நினைவே வந்தது. தஞ்சை வயல்களிலே புயல்!—இதை 'தகராறு' என்ற அளவிலே, குறிப்பிட்டு, பிரச்னையை முடிவு கட்டிவிட முயலுகின்றனர், புதுமைக்கும் பழமைக்குமிடையிலே பாலம் போட முயல்வோர். 'பண்ணையாள் முறை தேவலாமா?' 'கூலியாட்கள் முறை நல்லதா?' என்ற வாதங்களைக் கிளப்பி, வரண்ட குளத்தில், மீன் பிடிக்க எண்ணுகிறார்கள். வேதனை கலந்த விசித்திரம் இது! ஆங்காங்கு, உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும் என்ற உரிமைக் குரல் ஒலித்துக்கொண்டிருக்கிற நேரத்தில், 'பண்ணையாட்களை' குறித்துப் பேசுகிறார்கள். கடனில் குடும்பம் மூழ்கி, சொத்துக்கள் யாவும் ஏலம் போகும் நிலைமைக்கு வரும்போதும், தமது சலங்கை பூட்டிய மாடு, வில்வண்டி, ஜபர்தஸ்து எதையும் இழக்கமாட்டார்களாம் தஞ்சை மிராசுதார்கள்! அதே பாணியில் அன்பர் வெங்கட்ராமனும், நிலைமைகளை ஆராய்ந்திருக்கிறார். தஞ்சை மண்ணில் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள பிரச்னை, 'குத்தகை தாரருக்கு எவ்வளவு பங்கு கொடுக்கலாம்', 'வாரம் அதிகபட்சம் எவ்வளவு இருக்கலாம்', 'பண்ணையாட்களுக்கு பணம் கொடுத்து வைத்திருப்பது நல்லதா—கெட்டதா?' என்பது அல்ல. இது மேல் மாடியிலிருந்தகொண்டு பேசவேண்டிய விஷயம்! ஆனால், இந்த மேல் மாடியைத் தகர்த்து தரை மட்டமாக்கும் உத்வேகம் தான் உலகில், பரவிக்கொண்டிருக்கிறது—அதற்கு மருந்து தேட வேண்டிய கட்டத்தில், புனுகு பூசுகிறார் தோழர்! அவ்விதக் கருத்து கொண்டிருக்கிறது, காங்கிரஸ் தலைமை!! சென்னை மாநிலத்தில், விவசாயிகளிடையே அடிக்கடி அரும்பும் போராட்டங்களை, மிகவும் சாதாரணக் கண்கொண்டே பார்க்கவிரும்புகின்றனர், இன்றைய ஆளவந்தார்கள் — குரல் கொஞ்சம் அதிகரித்தால் துப்பாக்கியும் மலபார் போலீசும் இருக்கிறது என்ற துணிவுடன். ஆனால், நிலைமை வேறு! ஆங்காங்கே அடிக்கடி எழும்பும் அதிருப்திக் குரல்கள், வரப்போகும் அபாயத்தைஎச்சரிப்பவை-வளர்ந்துவரும் உரிமைக் குரலை எதிரொலிப்பவை. நிலத்தில் உழுது வாடுபவன், இன்று நிமிர்ந்து பார்க்கிறான்! பண்ணையாரின் மாடிவீடும்—மடாதிபதிகளின் தொந்தியில் புரளும் ரத்தினக்கண்டிகையும்—கோயிலுக்குள் கொண்டழிக்கப்படும் செல்வமும் — தனது உழைப்பின் உருவானது, என்று நினைக்கத் தலைப்பட்டுவிட்டனர்!! "பூமிமாதா—எனக்கும் தாய்தான். அவளுடைய மடியில் எனக்கும் பங்குண்டு" என்ற எண்ணம், அவனுடைய இதயத்தில் ஆழப் பதிந்து விட்டது. இதை, அங்கு வளர்ந்துவரும் புதுமைத்தாகம், கிளர்ந்தெழச் செய்து வருகிறது! ஏழு, எட்டுஆண்டுகளில் தஞ்சைபோன்ற இடங்களில் மலர்ந்திருக்கும், உரிமைத்தாகத்தை எவரும் குறைத்து மதிப்பிட்டுவிடமுடியாது. கடந்த தேர்தல்களில், அந்த மாவட்டம் முழுமையும் 'மாடுகள் இரண்டும்' விரட்டப்பட்டு, 'தானியக்கதிரே' வெற்றி பெற்றதென்றால் அதற்குள்ள முக்கிய காரணம் கிராமப்புறங்களில் வாழும் ஏழைபாட்டாளிகளின் வோட்டுகள்தான்! ஆறு ஆண்டுகளுக்கு முன்பு விவசாயப் பிரச்னை என்பது ஆதித்திராவிடப் பாட்டாளிக்கும், பண்ணைக்காரருக்குமுள்ள கூலிப் பிரச்னை என்று மட்டுமே கருதப்பட்டது. அவ்விதமே 'கிசான்' இயக்கக் கிளர்ச்சிகளும் நடைபெற்றன! ஆனால், இன்று, ஆதித்திராவிடப்பாட்டாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் மத்தியில் கிடந்துழலும் சாதாரணவிவசாயிகளும், உரிமைக் குரல் எழுப்பத் துவங்கிவிட்டார்கள். குத்தகைதாரர்கள் அதிக 'வாரம்' கோரி எழுப்பும் கூக்குரல் கூறும் பாடம் இதுதான்! நிலப்பிரபுவை நோக்கி, ஏழைப்பாட்டாளி பாய — "பார்! பார்!! உன்னை அழிக்க வருகிறான்" என்று சில்லரை விவசாயிகளைத் தூண்டிவிட்டு, ஆதித்திராவிட மகனும் அவனோடு வயலில் வேலைசெய்தாலும் 'உயர்ந்த சாதி' எனும் நினைப்புடன் கர்வத்தோடு உலவிய சில்லரை மிராசுதாரனும் மோதிக்கொள்ள, வயலிலே ரத்தம் வீழ, அதைக்கண்டு ரசித்துக்கொண்டு 'தஞ்சை'க்கும் 'சென்னை'க்கும், ஜாகைகளை நிலப்பிரபுக்கள் மாற்றிக்கொண்டிருந்த காட்சிகள் மறைந்துவிட்டன.

வயலிலே உழுபவன் கதியே தனக்கும் என்பதை சில்லரை விவசாயிகள் உணர்ந்துவிட்டார்கள். கழனியே காணாத 'வடபாதிமங்கலங்களும்', கண்ணையே திறக்காத கோயிற்சாமிகளும், அவர்களுடைய அறிவுக் கண்ணைத் திறந்து விட்டுவிட்டார்கள். அக்கினி பரவி வருகிறது! 'உழுபவன் நிலம் தன்னுடையதாக வேண்டும்' என்று விரும்புகிறான்!! சில நிலப்பிரபுக்கள் வாழ—தாம் மட்டும் வாடுவதேன்? என்கிற கேள்வி, ஆதித்திராவிட பாட்டாளிக்கும், அடுத்து நிற்கும் குத்தகைதாரனுக்கும், சில்லறை விவசாயிகளுக்கும் ஏற்பட்டு விட்டது. இந்த உண்மையை மறைக்க நினைப்பது, எரிமலையை மூடமுயல்வதைஒக்கும்!

தஞ்சை போன்ற இடங்களில் வளர்ந்து வரும் தீயை அணைக்க, தெளிடுதத்தமும், புனுகுப்பூச்சும் போதாது. அடிப்படைக் காரணங்களைக்கண்டு பிடித்து, அவைகளைத் தீர்க்க வேண்டும். இந்த "அடிப்படை" எதுவென்பதை, நாம், அடிக்கடி கூறியே வந்துள்ளோம். இந்த "அடிப்படை", மனித நாகரீகத்துக்கு இன்றியமையாதது என்பதை, பலப்பல நாடுகளும் உணர்ந்து வருகின்றன. சிவப்புச்சீனா, செய்து காட்டியிருக்கிறது! சிறுபூமி, காஷ்மீர், சட்டமியற்றியிருக்கிறது! நேற்று புது வாழ்வு கண்ட எகிப்து, சட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கிறது! "உழுபவனுக்கே நிலம்"—இதுதான், அந்த அடிப்பீடம். ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் குவிந்திருப்பதை, அறிவுலகம் ஏற்காது.

இந்த உண்மையை ஓரளவு புரிந்துகொண்டதால்தான்விநோபாபாவே 'பூதான யக்ஞம்' என்ற பெயரால், பணக்காரர் சிலரிடம் கொஞ்சம் நிலம் பெறுவதும் அதைப் பகிர்ந்து தருவதுமான செயல்களைச் செய்ய ஆரம்பித்துள்ளார். இந்தக் காரியம், அவரை ஒரு 'மகான்' ஆக்கிக்கொள்ள பயன்படுமேயன்றி—பலன் தராது. முக்கிய இலட்சியத்தையும் மூடி மறைக்கவே பயன்தரும்! உண்மைக்கும் பொய்க்கும் இடையே 'ஓர் இடம்' அமைத்துக்கொள்ள விரும்பும் 'பிற்போக்குப் பித்து', சிறு பிள்ளை விளையாட்டுக்களை, சீண்டிவிடுவதையே ஒக்கும். ஆகவே, புண்ணை மறைக்க இதுபோன்ற புனுகு பூச்சுகளில் நிலப்பிரபுக்களின் உல்லாச விடுதியான காங்கிரஸ் ஈடுபடுவது—பலனைத் தராது. வளர்ந்துவரும் "நிலம் நோக்கிச் செல்வோம்" என்ற முழக்கத்தை வலிவுறவே செய்யும். இதை, உணரவேண்டுகிறோம், ஆளவந்தாரை. நீதி, பேசும் போது காதுகளை மூடிக்கொள்வது ஆபத்தைத்தான் தரும். நீதி, பேசுகிறது. ஆங்காங்கும்! அதை சாதாரணச் சங்குகளை முழக்கி அடக்கிட முயலாதீர்!! அடிப்பீடம் மாற வழி கோலுங்கள்—வாழப் பிறந்தோரின் துயர் தீரட்டும் — அவர்களும் சுகமாக வாழட்டும்!

★

## காஷ்மீரும் டில்லியும்

"காஷ்மீரத்து நிதி விவகாரங்களை இந்தியாவுடன் இணைத்துக் கவனிக்கப்படுமென முடிவுசெய்திருக்கிறார்கள். இது மற்ற ராஜ்யங்களின் நிதி நிலைமையைப் பாதிக்கக்கூடிய முக்கிய பிரச்னையாகும். காஷ்மீருக்கும் இந்தியாவுக்குமிடையே ஏதாவது நிதி ஒப்பந்தங்கள் ஏற்படுமானல், அதை அப்போதைக்கப்போது, மற்ற ராஜ்யங்களின் பரிசீலனைக்கு வைக்கவேண்டும். இந்த விஷயத்தில் சென்னை சர்க்காரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில், இவ்விதம் ஒப்பந்தம் செய்வது ஒவ்வொரு மாகாண கஜானாவையும் பாதிக்கக்கூடிய விஷயமாகும். ஆகவே, இவ்விதம் செய்யப்படும் ஒப்பந்தம் ஒவ்வொன்றையும், நாம் பரிசீலனை செய்யவேண்டும். இந்திய சர்க்கார் காஷ்மீர் சம்பந்தமாக கைக்கொள்ளும் போக்கால் ஏராளமான பணம் விரயமாகிறது" என்று சென்னையில் டாக்டர் கிருஷ்ணசாமி எம். பி. குறிப்பிட்டிருக்கிறார். பணத்துக்காக வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் சென்னை சர்க்கார் இந்தக் காரணங்களையெல்லாம் வலியுறுத்தி, மத்தியசர்க்காரிடமிருந்து அதிக தொகை பெற முயற்சிக்கலாம். பத்து கோடி கடன் வேண்டுமெனக் கேட்டதற்கு ஆறு கோடி மட்டுமே தரமுடியும் என பதில் அளித்திருக்கிறது, டில்லி. அத்தகைய டில்லிக்காக, நமது வரிப்பணம், வீணாகிறது. காஷ்மீரம், இப்போது இந்திய சர்க்காருடன் பல வழிகளில் ஒத்துழைப்பதாகத் தோன்றினும், அது எவருடைய பிடியிலும் சிக்காது என்பது விளங்கிவிட்டது. இன்று, அப்துல்லா டில்லி வந்ததும், உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாகக் கூறிக்கொள்வதும், அப்துல்லாவின் ராஜதந்திரமே ஒழிய, அவரது இதயத்திலிருப்பது 'சுதந்திர காஷ்மீரம்' தான். இதை உணராத டில்லி, தனது ஆதிபத்யம் அங்கெல்லாம் நீடிக்கவேண்டுமென்பதற்காக, கோடிக்கணக்கான ரூபாய்களை, கொட்டுகிறது — பாதுகாப்பு, நிதி உதவி என்ற முத்திரைகளுடன். நாம், அல்லாடுகிறோம்! இதை உணரவேண்டும், மாகாணசர்க்கார்.

★

## 2000!

ஆபிரிக்க சர்க்காரின் நிறவெறிச் சட்டத்தை எதிர்த்து இதுவரை, இரண்டாயிரம் ஐரோப்பியரல்லாதோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இன்னும் தொடர்ந்து, கைது நடைபெற்று வருகிறது. இந்த அநீதியைக் குறித்து 'உலக நீதி' பேசுவோர், எவரும் கவலைப்படவில்லை—ஊமைகளாகவே இருக்கின்றனர். ஆபிரிக்கா சர்க்காரின் ஆபத்பாந்தவனாக யிருக்கும் பிரிட்டனும் பேசாமலே இருக்கிறது. இந்தக் கேடுகெட்ட நிலையில் ஆபிரிக்கா, பிரிட்டன், இந்தியா, யாவும் 'காமன்வெல்த்' கூட்டுறவு நாடுகளாம்! அநீதிக்குத் தலை வணங்கும், இந்த நிறவெறிக் கும்பலோடு, இந்தியா ஏன் சேர்ந்திருக்கவேண்டும்? என்று, நாம் கூறும்போதெல்லாம் குறைபட்டுக்கொண்டனரே, தேசீயத் திருவாளர்கள், இப்போது பிரிட்டனில் இந்தியத் தூதராக இருக்கும் வி. கே. மேனன் கூறுகிறார், 'இந்த நிலை நீடித்தால் எப்படி உறவு நீடிக்க முடியும்?' என்பதாக. சுதந்திர நாள் கொண்டாடியபோது, பிரிட்டனில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் இவ்வண்ணம் வெளியிட்டிருக்கிறார். 2000 பேர் கைது! அதுவும் தொடர்ந்து!! இதைச் செய்வது, காமன்வெல்த் நாடுகளுடன் நேசம் பேசும் சர்க்கார், இதைச் சகித்துக்கொண்டு 'இந்தியா'வும் இருக்கத்தான் வேண்டுமா? நீதிக்குப் போராடுவதைவிட "நீயும் நானும் நேசர்கள்" என்று பாடுவது, எவ்வளவு கேவலம்! எவ்வளவு அநாகரிகம்!!

★

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

இனிமையாகவா இருக்கும்! சுதந்திர நாள் அன்று மாளிகைக்கு விஜயம் செய்த மாதுசிரோமணிகளையும், 'வேலைக்காக' அல்லாடும் இந்த மங்கையர் கூட்டத்தையும் குறித்து எண்ணாமலா இருந்திருக்கும் அவரது இதயம்? ஜகஜ்ஜோதியென அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்கள் அணிந்த அந்தக் கூட்டம் எங்கே! வேகாத வெயிலில் வேலைதேடி அலையும் இந்தக் கும்பல் எங்கே!! — இந்தக் காட்சிகளைக் கண்டதும், பெருமூச்சோடு கூறினாராம், "இவ்வளவு வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதைக் காண மிகவும் வருந்துகிறேன்" என்பதாக. கூறிவிட்டு சோகத்தோடு, காரில் ஏறி அமர்ந்தாராம். மக்கள் வரிப்பணம்தந்தகார், அவரைஏற்றிக்கொண்டு, பெருமிதமாகராஜபவனத்துக்குள் நுழைந்திருக்கும்! ஆனால், தன்னைச்சுமந்து செல்லும் அந்தக் கார் கிடைக்க, வரி செலுத்தும் மக்கள் கூட்டம் படும் வேதனையைக் கண்ட அவர் மனம் நெகிழாமலா இருக்கும்? — நெகிழ்ந்திருந்தால் இந்த நிலைதான் நீடிக்குமா, சுதந்தர நாள் விழாவிலே 2000 பிரமுகர்களுக்கு விருந்துபசாரம்தான் நடக்குமா, என்று கேட்கிறீர்களா!!

★

## சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிட்டவைகளைகவனத்தில் கொள்ளக் கோருகிறோம்:

1. கடிதம், மணியார்டர் முதலியவைகளில் தவறாது சந்தா எண்ணைக் குறிக்கவும்.
2. முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

## ஆச்சாரியாருக்கு அர்ப்பணம்!

★

[கழகத் தோழரைத் தாக்கினர்! கழகக் கொடியினை அறுத்தனர்! — இவற்றைச் செய்தவர்கள், காங்கிரஸ் காரர்கள். இந்த வெறிச் செயல்களையும், அறப்போர் வீரர்கள் மீது நடைபெறும் வழக்கினையும் கட்சிப் பற்றற்று சர்க்காரை நடத்தும் 'கர்ம வீரா' என்று காங்கிரஸ் ஏடுகளால் போற்றப்படும் அன்பர் ஆச்சாரியார், பார்வைக்கு வைக்கிறோம்.]

### போடிநாயக்கனூர்

12—8—52 மாலை சுமார் 3½ மணிக்கு திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயலாளரும், தி. மு. க. தோழருமான செல்லப்பாவை நகரகாங்கிரஸ் பிரமுகர்கள் பலர் மனிதத்தன்மையற்ற முறையிலே தாக்கி வெறியாட்டம் நடத்தினர். தோழர் செல்லப்பா மருந்து வாங்குவதற்காக முனிசிபல் ஆஸ்பத்திரிக்குச் சென்றுகொண்டிருந்த போது, காங்கிரஸ் கமிட்டியினர்களில் முக்கியமான அறுவர், நகர காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்திலிருந்து ஓடிவந்து தோழரை செருப்பாலும் கையாலும் அடித்து இம்சைப்படுத்தினர். தோழர் செல்லப்பா மூர்ச்சையானார். இந்த அட்டகாசம் கண்ட பொதுமக்கள் அவரை, வெறியர்களிடமிருந்து விடுவித்து போலீஸ் ஸ்டேஷனுக்குத் தூக்கிச் சென்று 'புகார்' செய்தபின், சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். இதற்குள் நடந்த சம்பவம் நகர முழுமையும் பரவவே, சர்வகட்சித் தோழர்களும் கொதித்தெழுந்து, போடியில் முகாமிட்டிருந்த ஜில்லா கலெக்டர்—டெபுடிகலெக்டர் ஆகியோரிடம் 250 பேர் கொண்ட தூதுக்குழு சென்று, இந்த அநீதியைப்பற்றி முறையிட்டு, நீதிவழங்குமாறு கோரினர். இது சம்பந்தமாக, நடவடிக்கை மேற்கொள்வதாக, கலெக்டர் உறுதிதந்தார். முடிவு அறியக்காத்திருந்த பொதுமக்கள் "இன்றைய அநீதிக்கு நீதி வேண்டும்!" என்று முழக்கிய வண்ணம் ஊர்வலமாகச் சென்றனர். நகர சப்இன்ஸ்பெக்டர் தாம்நடவடிக்கை எடுப்பதாகப்பொதுமக்களுக்குவாக்குறுதியளித்தபின் கூட்டம் அமைதியாகக்கலைந்தது.

நகர காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகளின் இந்த வெறிச் செயலைக் கண்டிப்பதற்கு சர்வகட்சியின் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் 13-8-52ம் நாள் நடத்தப்பட்டது.

*

### நம்பியூர்

ஆகஸ்டு 15 சுதந்திர தினத்தன்று இவ்வூர் பெருமாள் கோவில் மைதானத்தில் பறந்துகொண்டிருந்த தி. மு. க. கொடியை காங்கிரஸ் 'வெறியர்கள் பிடுங்கி எரித்ததாகவும், இது சம்பந்தமாகப் போலீசாரிடம் கழகத் தோழர்கள் புகார் செய்திருப்பதாகவும், மேற்படியூர் கழகச் செயலாளர் என். ஆர். ரங்கசாமி அறிவிக்கிறார். அக்கிரமங்கள் மூலம் அரசியல் வாழ்வை நிரந்தரமாக்கிக் கொள்ள விரும்புவோர் குறித்து, ஆட்சியிலிருப்போர் என்ன நடவடிக்கை எடுக்கின்றனர் என்பதைக் கவனிப்போம்.

*

### வேலூர்

அறப்போர் வீரர்கள்:—அலமேலு அப்பாதுரை, மோகனவேல், இளஞ்செழியன், வேதாந்தம், புருஷோத்தமன் ஆகியோர்மீது ரயில்வே சட்டம் 120—பிரிவுபடி சர்க்கார் துவங்கியிருக்கும் வழக்கு 16—8—52 அன்று சப்மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடைபெற்றது. "இந்திபோர்டுகளை அழித்தீர்களா? அது குற்றம் என்று தெரியுமா? நீங்கள் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தீர்களா? என்ற கேள்விகளை மாஜிஸ்திரேட், கேட்டார். அதற்கு தோழர்கள் போர்டுகளை அழித்தது உண்மைதான் என்றும், போக்குவரத்துக்குத் தாங்கள் இடையூறாக இல்லையென்றும் தெரிவித்தனர். வழக்கு 5—9—52க்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. மாவட்டச்செயலாளர் போளூர் சுப்ரமண்யம் வழக்கைக் கவனிக்க வந்திருந்தார்.

## திராவிட முன்னேற்றக் கழக கிளைகளின் தேர்தல் புது நிர்வாகிகள்

[ தி. மு. க. பொதுச்செயலாளரின் அறிக்கைப்படி தஞ்சை, மதுரை, திருச்சி, சென்னை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கோவை மாவட்டங்களில் 17—8—52 அன்று புது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. ஜனநாயக முறையில் நடைபெற்ற இந்தத் தேர்தல்கள்—நமது வெற்றிகளின் முதல்படியாகும். புது நிர்வாகிகளை வாழ்த்துகிறோம். வந்த செய்திகளில், ஓரளவு இவ்வாரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது...... ]

### மதுரை

தலைமைக் கழக தாக்கீதை யொட்டி 17—8—52 ஞாயிறு காலை 11 மணிக்கு மதுரை நகர திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு தேர்தல், நகரக் கழக அலுவலகத்தில், தோழர் எம். அய்யாச்சாமி (செயலாளர்) தலைமையில் நடைபெற்றது. உட்கிளைகளிலிருந்துநகரகிளைக்குத்தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் பதிவு செய்து கொள்ளப்பட்டனர். அவர்கள் விபரம்:—

(1) தெற்கு வாசல்:—தாளமுத்து—நடராசன் நினைவுப் படிப்பகம்: எம். வி. மணி, ஜி. ரத்தினம். (2) ஆசைத்தம்பி படிப்பகம்: சு. ராமச்சந்திரன், பா. செல்லையா. (3) வள்ளுவர் படிப்பகம் யானைக்கல்: வ. இராவணன், மதுசூரா. (4) சுப்பிரமணியபுரம் பகுத்தறிவுப் படிப்பகம்: பி. கே. சேதுராமன், வி. நாகசுந்திரம். (5) கீழமாசி வீதி—திராவிட மறுமலர்ச்சி மன்றம்: வ. திருமாறன், பொன்னி நடராசன். (6) மீனாட்சி தோப்பு செல்வம் படிப்பகம்: டி. எஸ். இராயப்பன், எ. தங்கையா. (7) பாண்டிய வேளாளர் தெரு இளங்கோ மன்றம்: கே. எஸ். மணி, ஆர். கே. காளை. (8) மத்திய வட்டாரம்: எஸ். பாண்டி, கே. ராமசாமி (9) கோரிப்பாளையம்: அ. கந்தசாமி, பா. கா. மொய்தீன் பிச்சை, (10) சந்தைப்பேட்டை: கே. எஸ். ராசமான், எஸ். சி. மாணிக்கம், (11) வேலாயுதம் நினைவுப் படிப்பகம்: ஆ. சுப்பையா, கு. மாடசாமி. (12) நெடுஞ்செழியன் மன்றம்: கோ. அழகர்சாமி, மு. சௌந்தரபாண்டியன், (13) முத்து படிப்பகம்: மா. இரத்தினம், அ. தர்மர், (14) வடக்குமாசி வீதி: பி. இராமனுசம், கோ. முத்துச்சாமி.

மேற்படி பிரதிநிதிகளின் கூட்டத்தில் நகரக் கழகச் செயலாளர் பதவிக்கு தோழர்கள் எஸ். முத்து, கே. எஸ். ராசமான் ஆகியோர் சார்பில் அபேட்சை மனுக்கள் கொடுக்கப் பட்டன. இரகசிய முறையில் தேர்தல் நடைபெற்றது. தோழர் எஸ். முத்து, நகர திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைச் செயலாளர் பதவிக்கு தோழர்கள் எம். மாணிக்கம், கே. எஸ். ராசமான் ஆகியோர் பெயர்களைப் பிரேபித்து அபேட்சை மனுக்கள் வந்திருந்தன. தோழர் ராசமான் போட்டியிலிருந்து விலகிக்கொண்டதால் தோழர் மாணிக்கம் துணைச் செயலாளரானார்.

பொருளாளர் பதவிக்கு தோழர்கள் எம். வி. மணி, ம. அப்துல்காதர் ஆகியோர் சார்பில் அபேட்சை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. தோழர் அப்துல்காதர் போட்டியிட விரும்பாததால் தோழர் மணி பொருளாளர் ஆனார்.

கீழ்க்கண்ட தோழர்கள் மதுரை மாவட்டக் கழகப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் விபரம்:—

1. எஸ். வி. தொந்தி
2. எஸ். முத்து
3. அய்யாச்சாமி
4. அப்துல்காதர்
5. கே. எஸ். ராசமான்
6. பி. கே. சேதுராமன்
7. கு. வேலு
8. ஜி. ரத்தினம்
9. எஸ். கிருஷ்ணசாமி
10. ச. சுப்பிரமணியம்
11. சி. பாக்கியம்
12. அ. கந்தசாமி
13. பி. இராமானுசம்
14. திருமாறன்
15. மா. இரத்தினம்
16. எஸ். சி. மாணிக்கம்
17. பாண்டி
18. அ. தர்மர்

தங்களைத் தேர்ந்தெடுத்தற்காக தோழர்கள்: எஸ். முத்து, எம். மாணிக்கம், எம். வி. மணி ஆகியோர் நன்றி கூறினார்கள். புதிய செயலாளரையும் செயற்குழுவினரையும் பாராட்டி தோழர் கே. எஸ். ராசமான் பேசினார். முன்னாள் செயலாளர் அய்யாச்சாமியின் தொண்டுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. என்று எம். மாணிக்கம் துணைச் செயலாளர் அறிவிக்கிறார்.

### குன்னூர்

பொதுச் சாவடியில் தோழர் முத்துக்கன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், பின்வருமாறு தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

செயலாளர்: தமிழப்பன், துணைச் செயலாளர்: வெ. சுப்பையன், பொருள் உறுப்பினர்: கி. காமாட்சி, விளம்பர உறுப்பினர்: மி. கருப்பையா, துணைவிளம்பர உறுப்பினர்: பொ. மூக்கையா, மாவட்டக் கழகத்துக்கு கொ. மகாலிங்கம்.

### பூசாரிக் கவண்டன்பட்டி

தோழர் நா. கி. ராமர் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பின்வருமாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்: எம். ராமராசு, துணைச் செயலாளர்: எஸ். சீனிச்சாமி, பொருளாளர்: என். எஸ். ராமர், வட்டப் பிரதிநிதி: எஸ். சீனிச்சாமி, விளம்பர உறுப்பினர்: எ. பொன்ராம், துணை விளம்பர உறுப்பினர்: டி. மாயாண்டி, செயற்குழு உறுப்பினர்கள்: கோ. வீருமல்லையா, தா. பொம்மையா, பி. ராசு, எஸ். சின்னபொம்மையா, இ. மாசாணம், எம். ராமர், வ. முத்துவைரவர், சி. கோடியப்பா, எஸ். பி. பாண்டியன்.

### சித்தையன்கோட்டை

தோழர் ஆண்டவன் தலைமையில் நடைபெற்ற தேர்தலின் முடிவுகள்: செயலாளர்—என். பி. நாச்சியப்பன், துணைச்செயலாளர் — கே. சாகுல் அமீது, பொருளாளர்—கே. கே. துரை, விளம்பர உறுப்பினர்—என். அப்துல்காதர், மாவட்டப்பிரதிநிதி—எஸ். எம். சாகிம், செயற்குழு உறுப்பினர்கள்:- கே. எல். முகமது இபுராகிம், கே. எல். காமராசன், க. முத்து, அ. வெங்கடாசலம், இரா. ஆண்டவன், எஸ். பி. சுப்பிரமணி, ஜி. மணி, இரா. பொன்னன், பி. காதர்சையது, எஸ். எஸ். லிங்கம், டி. காசிநாதன்.

### கொண்டயம் பட்டி

தோழர் சு. பெ. ரா. மலைச்சாமி தலைமையில் தேர்தல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்:- செயலாளர் ந. பெ. பெ. பழனிச்சாமி, துணைச்செயலாளர் அ. இராமலிங்கம், பொருளாளர் கே. கே. இராஜலிங்கம், விளம்பர உறுப்பினர் இ. பாலுச்சாமி, மாவட்டப்பிரதிநிதி: சு. பெ. ரா. மலைச்சாமி, செயற்குழுவினர் விபரம்:—பி. பெருமாள், ஆர். பி. கன்னியப்பன், கோ. வெள்ளைச்சாமி, பெ. சு. அருணாசலம், க. துரைச்சாமி, பறங்குன்றம், வீ. நாகன், ப. குருசாமி, க. பாலுச்சாமி, கோ. ஆறுமுகம், பெ. பெரியசாமி.

### அப்பிபட்டி

செயலாளர்: மா. வை. கருணி, துணைச்செயலாளர் சு. பாண்டியன், மாவட்டப் பிரதிநிதி: க. பாலையா, பொருளாளர்: கி. செல்லப்பா, விளம்பர உறுப்பினர் வெ. ஜயபால் செயற்குழு உறுப்பினர்கள்: வி. லோகநாதன். தா. சதுரகிரி, கி. கோவிந்தன், மா. போத்தி, மு. லத்தீப்பு, மு. மாணிக்கம், பெ. கங்காபாண்டியன்.

### ஆண்டிப்பட்டி

செயலாளர்:— தலைமலைபாண்டியன், துணைச்செயலாளர்:— கு. சுப்ரமணியன், பொருளாளர்:—ச. பழனிச்சாமி, மாவட்டப் பிரதிநிதி:— எம். எஸ். பால்ராசு, ஏ. கருணியப்பன், குமாரசாமி, ச. மாணிக்கம், வி. சுப்ரமணியன். துரைபாண்டியன், கருப்பையா, வேம்பாத்தான், எம். முத்து.

### தேனி:

தோழர் அ. தேவராசன் தலைமையில் தேர்தல் நடைபெற்றது செயலாளர்—கே. காதர்மைதீன், துணைச் செயலாளர் கு. ராசா, பொருள் உறுப்பினர் கே. பி. பி. எம். நாராயணசாமி, விளம்பர உறுப்பினர் செ. அய்யப்பன், மாவட்டக் கழக உறுப்பினர் அ. தேவராசன். செயற்குழு உறுப்பினர்கள்: வி. குருசாமி, எம். சோமசுந்தரம், அ. துரைச்சாமி, அ. ஆறுமுகச்சாமி, தி. செல்லையா, சோ. பழனிச்சாமி, பா. மாடசாமி, சு. ராசு.

### தோழர்களே!

உட்கிளைகள் பல கொண்ட நகரங்களில் நடைபெற்ற தேர்தல் விபரங்களை அந்தந்த நகரக் கழகச் செயலாளரே பொறுப்பேற்று, நமக்கு எழுதி அனுப்புமாறு கோருகிறோம்.

❋

## உரிமைக் குரல்

இந்தியைத் திணிக்காதே!
எமது சொத்தைப் பழிக்காதே!!

என்று ஆயிரக்கணக்கான மாணவர்களும், சட்ட சபை உறுப்பினர்கள் சிலரும், கையிலே கருப்புக் கொடி தாங்கிக்கொண்டு முழக்கமிட்டனராம். செகந்தராபாத்தில், ஆகஸ்டு 17ந் தேதியன்று, நடைபெற்றிருக்கிறது இது. ஐதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழகத்தை, டில்லி தன் வசமாக்கிக்கொள்ள, அனுப்பியிருக்கும் ஒரு கமிஷனைத்தான் கருப்புக்கொடி காட்டி 'வரவேற்றிருக்கின்றனர்' — ஐதராபாத் வாலிபர்கள். மேற்படி பல்கலைக் கழகத்தை இந்திப் பல்கலைக் கழகமாக்கிடத் திட்டம் தீட்டியிருப்பதற்கு, ஐதராபாத்தில் பலத்த எதிர்ப்பு இருந்துவருகிறது. 'கமிஷனே திரும்பிப் போ!' என்று அன்று ஆயிரமாயிரம் இதயங்கள், உரிமைக் குரல் எழுப்பியிருக்கின்றன. கருப்புக் கொடி காட்டி தமது கண்டனத்தைத்தெரிவித்திருக்கின்றன.

## தஞ்சை மாவட்டம்

### மாயவரம்

மூதாட்டி ராமாமிர்தத்தம்மையார் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பின்வருமாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர் — வை. மாணிக்கம், என். கிட்டப்பா, பொருளாளர் ஆர். பழனிச்சாமி, மாவட்டப் பிரதிநிதிகள்: மூதாட்டி ராமாமிர்தம்மை, ஆர். பழனிச்சாமி.

செயற்குழு உறுப்பினர்கள்:- வி. சங்கையயன், டி. காசிநாதன், ஆ. இராமாமிர்தத்தம்மை, எஸ். செல்வராசன், கே. எஸ். சௌந்தர், வி. எ. பாண்டியன், பி. சந்தானம், ஆர் ராமானுஜம், எஸ். மீனாட்சிசுந்தரம், ஜி. வி. பாலகிருஷ்ணன், பி. டி. ராசன், என். ஜயராமன், எஸ். என். குருமூர்த்தி, டி. கே. தப்புசாமி, எ. செபாஸ்டியன், பி. எ. பாபுஜான், சி. சந்தியாரு, கே. அருணாசலம்.

### நெடும்பலம்

தோழர் செ. தங்கவேல் தலைமையில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள்: செயலாளர் டி. எஸ். கலியாணசுந்தரம், துணைச் செயலாளர் க. வைத்திலிங்கம், பொருளாளர் பி. கோபலகிருட்டினன், மாவட்டப் பிரதிநிதி செ. தங்கவேல்.

செயற் குழுவினர்:- ஆர். நடராசன், ஆர். திருவேங்கிடம், கே. கிருட்டினசாமி, செ. சுப்பையன், அ. சொக்கலிங்கம், எஸ். பஞ்சநதம், வி. சாமிநாதன்.

கழகத்துக்கென் திரு என். எஸ். ராமலிங்கம் இலவசமாக அளித்திருக்கும் கட்டிடத்துக்கு அண்ணா அறிவகம் என்றுபெயரிடப்பட்டது.

### நாகூர்

தோழர் முருகையன் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் :— செயலாளர்:—எஸ். வி. சபாபதி, துணைச்செயலாளர்:— ஆர். முருகையன், பொருளாளர்:— எஸ். ரெங்கராஜ், செயற்குழுவினர்:— சி. சண்முகம், எம். ராமு, கே. காத்தலிங்கம், பி. சௌரிராஜுலு, கே. பச்சிரிசாமி, வி. துரைராஜ், எம். ஏ. ஹமீது, என். செல்வராஜ், ஆர். கோவிந்தசாமி, ந. மாரியப்பன்.

### திருத்துறைப்பூண்டி

செயலாளர்:— கு. சேக்குஉசேன் துணைச்செயலாளர்:— கோ. பெருமாள், பொருளாளர்:— இரா. செல்லத்துரை, மாவட்டப்பிரதிநிதி:— வை. சுப்பிரமணியன், செயற்குழுவினர்:— சொக்கலிங்கம், தருமலிங்கம், எஸ். மகபுல்உசேன், ஜானகிராமன், இரா. இருதயசாமி, கன்னையன், வேம்பையன்.

கடந்த ஆண்டு செயலாளர் தோழர் சிவாஜி, குறைந்த செலவில் ஒலிபெருக்கி தந்துதவும் இரா. இருதயசாமி, சித்திர நிபுணர் சொக்கலிங்கம், அச்சக உரிமையாளர் சண்முகம் ஆகியோருக்குநன்றி தெரிவிக்கப்பட்டது.

### அறந்தாங்கி

தோழர் இராம. சேதுராமன் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்டோர்: —

செயலாளர்: இராம அசோகன், துணைச் செயலாளர்:- மூ. சீனுவாசன், பொருளாளர்:- பெ-சதாசிவம் மாவட்டப்பிரதிநிதி:— வீரராகவன்.

### மாங்குடி

செயலாளர்:— டி. எஸ். நாதன், துணைச்செயலாளர்:—வி-ஜெயராமன் விளம்பர உறுப்பினர்:— இரா. கோபால்சாமி, பொருளாளர்:— டி. பாலசுப்பிரமணியன், நிர்வாகக் குழுவினர்:— வேங்கிடம், என். நாகரத்தினம், ஆர். சிங்காரவேலு, எஸ் ராமானுசம், ஜே. கோவிந்தசாமி.

### பேராவூரணி

தோழர் கே. அடைக்கலம் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்டபுதிய நிர்வாகிகள்:— செயலாளர் பி. வடிவேல், துணைச்செயலாளர் கே. கணேசன், பொருளாளர்:— எஸ். சூரியமூர்த்தி, மாவட்டக் கழகப் பிரதிநிதி:— அடைக்கலம் மேலும் 17 பேர்கொண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### கொத்தமங்கலம்

செயலாளர்:— எஸ். எம். மணி, துணைச்செயலாளர்:— பி. டி. சாமி, பொருளாளர்:— வி. எம். ஆறுமுகம் மாவட்டப்பிரதிநிதி :— எஸ். எம். மணி, செயற்குழுவினர்:— ஏ. கணேசன், எம். சின்னப்பா, ஏ. திருப்பதி, ப. ராமசாமி, பி. கே. கருப்பையா, ஏ. ரத்தினம், எம். ராமசாமி, ஆர். குமாரசாமி.

## சேலம்

### சலகண்டாபுரம்

தோழர் ப. கண்ணன் தலைமையில்: செயலாளர் அ. மு. அண்ணாமலை, துணைச் செயலாளர் ப. செல்லப்பன், பொருளாளர் ர. அ. அண்ணாமலை, மாவட்டப் பிரதிநிதி ப. கண்ணன்,

### குள்ளம்பட்டி

அழகிரி பாசறையில் தோழர் வி. இராமலிங்கம் தலைமையில்: செயலாளர் ப. இராமலிங்கம், துணைச்செயலாளர் சி. முத்துச்சாமி, பொருளாளர் மு. கோவிந்தசாமி, மாவட்டப் பிரதிநிதி ப. இராமலிங்கம்.

செயற்குழு உறுப்பினர்கள்: இ. கந்தசாமி, சி. மாரிமுத்து, செ. பழனியப்பன், ர. ராமச்சந்திரன், ந. முனியப்பன், சு. ராய்ப்பன், கு. பொன்னன்.

### ஒக்கிலிபட்டி

தோழர் ர. வரதராசன் தலைமையில்: செயலாளர் ர. வரதராசன், துணைச் செயலாளர் இ. முனியப்பன், பொருளாளர் கி. வீரபத்திரன், மாவட்டப் பிரதிநிதி: ர. வரதராசன்.

செயற் குழுவினர்: தா. சித்தன், ப. மாரிமுத்து, மு. தாண்டவன், மு. பழனியப்பன், மு. எல்லப்பன், மொ. சின்னபையன், வீ. இருளப்பன், அ. சுப்பிரமணியன்.

### ஆத்தூர்

தோழர் முத்து தலைமையில் நடைபெற்ற தேர்தலில்: செயலாளர் கே. நாராயணசாமி, துணைச் செயலாளர் ஆர். எஸ். மணி, பொருளாளர் எஸ். சங்கரலிங்கம் செயற்குழுவினர்: பி. எ. ஆறுமுகம், கே. முத்து, டி. கே. மாதவன், எ. ஆர். செயராமன், ஜி கிருஷ்ணன், எ. டி. சபாபதி, எஸ். பானுசாமி, கே. நாகராசன், ஆர். கிருஷ்ணன், எம். வெங்கிடாசலம், கே. எஸ். மணி, ஆர். மகாலிங்கம், ஆறுமுகம்.

### புனல்வாசல்

தோழர் ராசு தலைமையில் நடைபெற்ற தேர்தலில்: செயலாளர் மு. உமாபதி, துணைச் செயலாளர் அ. ராசு, பொருளாளர் கே வெங்கிடாசலம், மாவட்டப் பிரதிநிதி இரா. கருப்பண்ணன், செயற்குழுவினர்: பி. சின்னசாமி, எஸ். ஆறுமுகம், சி. கந்தசாமி, ஆர். முத்துச்சாமி, ர. சின்னசாமி, என். பொன்னுசாமி, பி. நல்லு.

### நரசிங்கபுரம்

தோழர் எம். முத்து தலைமையில் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. வெற்றி பெற்றோர்: செயலாளர் என். கே. நல்லவாண்டு, எ. சின்னக்கண்ணு, பொருளாளர் என். என். பெரியசாமி, விளம்பர செயலாளர் என். சி. சுப்ரமணியம், மாவட்டப் பிரதிநிதி என். கே. ராசு, வட்டக் குழு உறுப்பினர் பொன்ராமன், எம். மாணிக்கம். செயற்குழுவினர்: எம். முத்து, அ. பெரியதம்பி, எ. முத்துசாமி, பூ. குப்பன், வி. துரைசாமி, என். கே. கணபதி, என். டி. பெரியசாமி, கே. கோவிந்தன், எம். பொன்னுச்சாமி, வி. குப்பன், கே. தங்கமுத்து, எ. சின்னவன், என். எஸ். நடேசன், என். எஸ். கோவிந்தசாமி.

### பொத்தனூர்

தோழர் இரா. சகந்நாதன் தேர்தல் அதிகாரியாக யிருந்து நடத்திய தேர்தலின் முடிவுகள்: செயலாளர் மலை. சகந்நாதன், துணைச் செயலாளர் கே. எஸ். துரைசாமி, பொருளாளர் க. கணேசன், மாவட்டப் பிரதிநிதி: இரா. சகந்நாதன், விளம்பர உறுப்பினர் பொ. கந்தசாமி, செயற்குழு உறுப்பினர்கள்: கு. ஆறுமுகம், பி. கே. வேலாயுதம், வியாபா. மா. ஆறுமுகம். கந்தசாமி, மா. நடேசன், பொ. கந்தசாமி, கு. ராசு, கா. சுப்பிரமணியம், ஆ. வையாபுரி, மலை. சகந்நாதன், இரா. சண்முகம், கொ. நடேசன்.

## திருச்சி

### மேட்டுப்பாளையம்

தோழர் எஸ். முத்துச்சாமி தலைமையில் தேர்தல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர் ப. கிருட்டிணசாமி, துணைச் செயலாளர்: மு. பாட்டையன், பொருளாளர் ஆ. நாராயணசாமி, துணைப் பொருளாளர் தா. கிருட்டினன்: விளம்பர உறுப்பினர்கள்: ப. சுப்பிரமணியம், ஆ. பெரியசாமி, க. அன்பழகன், பெ. முத்துச்சாமி, மாவட்டப் பிரதிநிதி: எம். பி. முத்துசாமி, செயற்குழு உறுப்பினர்கள்: மி. மாரிமுத்து, நா. இராமசாமி, அ. குப்புசாமி, பெ. சண்முகம், பெ. இராமசாமி.

### துறையூர்

பொதுக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டோர். செயலாளர்: பி. எஸ். முனுசாமி, துணைச் செயலாளர்: டி. எஸ். கோவிந்தன், பொருளாளர்: டி. வி. சீனிவாசன், செயற் குழு உறுப்பினர்கள்: பி. கிருஷ்ணன், எம். துரை அரசன் ச. சின்னையன், எஸ். ஆறுமுகம் வி. துரைசாமி, க. நல்லேந்திரன் கே. சின்னையன், டி. வீராசாமி, எ ஆறுமுகம், என். வி. நாகராசன் எஸ். பரமசிவம், எச். எம். எ. ரஜாக். மாவட்டக் குழுவிற்கு: அ. ப.: அழகமுத்து, :பி. எஸ். முனுசாமி.

### தொட்டியம்

தோழர் எம். ஏ. கணேசன், தலைமையில் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டோர்:— செயலாளர்:— எஸ்-மருதநாயகம், துணைச் செயலாளர்: - வி. கந்தசாமி, பொருளாளர்:— எம். ஏ. கணேசன், செயற்குழு உறுப்பினர்கள்:— ஆர். ராஜு, ஏ. ராமசாமி, ஆர். ராமசாமி, ஆர். முத்து, என். பெரியசாமி, பி. மகாமுனி, பழனியாண்டி, டைலர் சுப்ரமணியம், எம். எஸ். மணி, என். நாராயணன். மாவட்ட குழுவுக்கு எம். ஏ. கணேசன், எஸ். மருதநாயகம்.

### வையம்பட்டி

17—8—52ல் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டோர். செயலாளர். ந. சண்முகம், துணை செயலாளர் ரா. நடராசன், பொருளாளர் சோ. பிச்சை.

செயற் குழுவினர்:- மு. கருப்டையா, வி. எஸ். மாரிமுத்து, கே. சுப்பராமன், க. ஆறுமுகம், ம. துரைசாமி, கு. பிச்சை. ம. மாரியப்பன், கி. பொன்னுசாமி, மாவட்ட பிரதிநிதி. ந. சண்முகம்.

தோழர், ஆர். அருணாசலம் தலைமையில் தேர்தல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்:- செயலாளர், தி. மகேந்திரன், துணைச் செயலாளர், இரா. கணபதி, பொருளாளர், ஆர். பழனிவேலு, விளம்பர உறுப்பினர் ச. கு. சங்கரலிங்கம், மாவட்டப் பிரதிநிதிகள்:- தி. மகேந்திரன், க. ஞானமுத்து.

---

## திருவண்ணாமலையில்!

திருவண்ணாமலை நகராட்சி மன்றத் தலைவரும் நமது கழக முன்னணி வீரருமான ப. உ. சண்முகம் அவர்களின் படத்தை 18—8—52 அன்று திருவண்ணாமலை நகரசபை ஹாலில் தோழர் சி. பா. ஆதித்தன் திறந்து வைத்தார்!

---

## நடக்க இருப்பவை.

வேள்ளனூர் :— (லால்குடி தாலுகா) பிள்ளையார்கோவில் அருகில் 26—8—52 செவ்வாயன்று முத்தமிழ்ச்செல்வன் தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், அ. பொன்னம்பலனார் சொற்பொழிவாற்றுவார்கள்.

வையம்பட்டி :— 28—8—52 அன்று தோழர் நெடுஞ்செழியன், M. A. சொற்பொழிவாற்றுவார்.

---

### தி. மு. க.

## 3-வது ஆண்டு மலர்

★

21—9—52 அன்று "திராவிட நாடு" மலர் வெளிவர இருக்கிறது.

வர்ண முகப்பும், அரிய கருத்து விருந்துமாக, மலர் திகழும்.

அருமையான கட்டுரைகள் கதைகள் பலவும் இடம் பெறுகின்றன.

எழில் மிக்கதோர் மலராக மணம் வீசும்.

மலர் பெற விரும்புவோர் 1—9—52-க்குள் 0—8—0 வோடு நமக்கு முன்னதாகவே தேரிவிக்க வேண்டும்.

தோழர்கள், ஆங்காங்குள்ள நமது ஏஜண்டுகளிடமும், எட்டணா செலுத்தி, பதிவு செய்து கொள்ளலாம்.

குறிப்பிட்ட தேதிக்குப்பின், மலர் விரும்பி எவர் எழுதினாலும், கவனிக்க இயலாது.

சிறந்த மலர்! அரிய முறையில் வெளிவரும் !!

நிர்வாகி

எலியும் பூனையும் விரோதிகள்

*யார் சொன்னது, தெரியுமா? எங்கள் தலைவர்!*

காக்கை கருப்பு

*தலைவர் தந்த மணிமொழிஇது!*

முதலாளிகள் முதலைகள்

*எமது சிந்தனைச் சிற்பி கண்டு பிடித்தது.*

*

என்னருமை நாட்டினரே! எழில் மிகுஞ் சிங்கங்காள்! தலைவர், சிந்திய மணிவாசகங்களை இதயத்திலே ஏந்துங்கள். அவரே நமது ஞானபிதா. வழிகாட்டி. அவரைவிட்டால் இந்த அவனி, வாழுமோ? ஆகா! எத்தகைய மாவீரர் அவர்! அவரது அந்த சிங்கார உருவம், கம்பீரக்குரல், உடுத்திருக்கும் ஆடை!!—ஆகா, அவரே நம்தலைவர். இந்நாட்டின் பிதா. அவர் அழைக்கிறார்! முதலாளிகள் முதலைகளாம்-கூறிவிட்டார். கொடி தூக்குக! முதலைகளை அழிக்க விறிட்டெழுங்கள்! அவரது திருநாமத்தை உச்சரித்துக்கொண்டு, திரு உருவத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டு உடனே கிளம்புங்கள்.

*

"பாரப்பா! அந்த ஆசாமிக்குக் கீழ் எல்லோரும் எப்படி அடி பணிந்து கிடக்கிறார்கள்"

"போண்ணே! பொல்லாத காரியும் செய்பராங்கோ. விளைவுரொம்ப கெடுதலாமுடியும்?"

"ஏம்பா, என்ன சொல்றே? கொஞ்சம் தெளிவாத்தான் பேசேன்"

"அவரை 'கடவுளுக்கு' அடுத்த படியில் வைத்து இப்படிப் போற்றிப் புகழ்மாலை சூடுராங்களே, நாளைக்கு ஒண்ணுநேர்ந்துட்டா..."

"என்ன ஆயிடும்?"

"கொளகை எப்படிண்ணே வளரும் வாழும்? இப்பொழுது நடப்பதெல்லாம் அவர் மகத்துவத்தினால் என்றல்லவா, இவர்கள் விளம்பரம் செய்கிறார்கள். அவருக்குப்பின், அந்த மகத்துவம்,........."

"ஏம்பா! அவர் கொள்கைகளைச் சொன்னால் மக்கள் அவ்வழி வராமலா போய்விடுவர்?"

"கொள்கைளைவிட, அவரைப் பற்றி, அவர் மகத்துவத்தைக் குறித்து, அவரது தியாக சுபாவத்தின் பெருமையை விவரித்து — இப்படியல்லவா பேசுகிறார்கள். கொள்கையைவிட அவர் அல்லவா மக்களுக்குத் தெரிகிறார்."

*

Hero-worship என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். ஒருவரை 'கடவுள்' ஆக்கி அவருக்கு பின் படையென்று பேசி, அவரை அசைக்கமுடியாத இமய உச்சியில் ஏற்றிவைத்துவிட்டு, அவரே ஞானகுருவெனப் போற்றிப் புகழ்வது! இந்தச் செயல், ஜனநாயகயுகத்தை சாக்காட்டில் தள்ளுவதென, அறிஞர்கள் கூறுவர். ஒரு சிலரைப் பூஜித்து பீடத்தில் அமர்த்திவிட்டு, 'அவர்கள் சொல்லே சட்டம்' என்ற நிலையை வளரவிட்டுவிட்டால், நாடும் வாழாது! அரசியல் இயக்கங்களும் வளராது!! மடாதிபதிகளுக்கும், மன்னாதிமன்னர்களுக்கும், இந்த 'தலைவர்களுக்கும்' எவ்வித வேற்றுமையும் கண்டு பிடிக்கமுடியாது. ஏழைகள் மனதோடு உலவிய ஹிட்லரைப்பற்றிப் புகழ்ந்து ஏற்றமுடியாத இடத்தில் அமர்த்தியதன் விளைவையும், முசோலினியால்வந்த விபரீதங்களையும், உலகு அறியும். அரசியல் தலைவர்களை, ஞானப்பிதாக்களாக்கி, அவர்களே கடவுளின் தூதர்கள் என்கிற மனோபாவத்தை மக்களிடம் பரப்பி, அந்தப் போலித் திரையில் பொதுவாழ்வை நடத்த

# பூஜா மனோபாவம்!

விரும்புவது எத்தர்கள் திட்டமாகும். 'மாவீரர்!' என்று போற்றக்கூடிய தகுதி பெற்ற தலைவர் ஒருவரை 'தண்டம்சமர்ப்பித்தோம் தலைவா! என்ன ஆக்ஞையிடுகிறீர்கள்?' என்று மண்டியிட்டுத்துதிக்கும் நிலைக்கு வளர்த்து, அந்தத்தலைவரின் அருமை பெருமைகளைமட்டும் எடுத்துச் சொல்லி, கொள்கை வளர்ப்பது எப்போதும் ஆபத்தானது! சில வேளைகளில் இந்த Hero-Worship முறை தேவைப்படலாம். மூடநம்பிக்கையும் பழமைப் பாசமும் நிரம்பிய பூமிகளில் 'தலைவனைக்காட்டி, கொள்கைகளை வளர்க்கும்படியான நிலைமைகள் ஏற்படுவதுண்டு. தலைவன் தாங்கியதடியடியைக் காட்டி—தலைவன் கழித்த சிறைவாசங்களின் விபரங்களைக்கூறி—ஏழைகள் மத்தியில் அவர் உலவிச் செய்த கீர்த்தி மிக்க தகவல்களை விவரித்து—கொள்கைகளை வளர்க்கும்படியான நிர்ப்பந்தங்கள், ஏற்படுவதுண்டு. அது, நியாயமானதுங்கூட. சாம்பிராணிக்கும் சூடத்துக்கும் ஆட்பட்டுக்கிடக்கும் மக்கள் மன்றத்தில் இது ஓரளவுக்குத் தேவையாகக் கூடத் தென்படலாம் ஆனால், இது, ஆரம்பத்துக்குத்தானே ஒழிய கடைசி வரைக்கும் இதே முறை தொடர்வது—நோக்கத்தைத் தோல்வியுறச் செய்யும். சித்துவிளையாடிய மகான்கள்! வாயைக்கட்டும் வல்லமை மிக்கவர்கள்!—இப்படிப் பட்டவர்களைத் துதித்து, புகழ்பாடி, வாழும் சமுதாயத்தில், நல்லகொள்கைகளைப் பரப்ப, ஓரளவுக்கு Hero-Worship தேவைப்படலாம். ஆனால் அதையே நிரந்தரமாக்கி, மக்கள் மன்றம் வளர்ச்சியடைந்த பின்னும் பேசுவதும் புகழ்வதும் எத்தர்களின் செயல் என்றே, புதுமைவிரும்பிகள் கருதுவர். இந்த உண்மையையும், இந்த 'பூஜிக்கும் மனோபாவம்' கூடாது என்பதையும், 1948 ஆகஸ்டில் சென்னைக்கு வந்த பண்டித நேரு சொற்பொழிவாற்றுகையில், மிகவும் தெளிவாகக்கூறினார்.

"It is a dangerous thing to put a few people in authority and to idolize them, as you sometimes idolize me I want to warn you that It is a dangerous thing, because it is bad not only to the individual who is idolized in this way, but you also get into wrong habits you tend to make that person function, shall I say in an autocratie manner. you tend to create possible an oligarchy of such individuals........"

சில்லரை அதிகாரத்தில் அமர்த்தி விட்டு அவர்களை—சில வேளைகளில் என்னை ஆராதிக்கிறீர்களே அதுபோல-பூஜிக்கும் மனோபாவம் ஆபத்தானது. இப்படிச் செய்வதால், நீங்கள் போற்றித் துதிக்கும் நபரை, இறுமாப்புள்ளவராக்கி விடுகிறீர்கள்.

இது, தான் பண்டித நேரு அவர்கள் பேசியது. நாட்டில் வளர்ந்து வரும் உண்மையான நிலையைப் படம் பிடித்துக் காட்டினார் பண்டிதர். பூஜிக்கும் மனோபாவம், எவ்வெவ்வளவு தீங்குகளை விளைவிக்கும் என்கிற பேருண்மையை அவர் வெளிப்படையாகச் சொன்னார். கொள்கைகளைக் கூறும் தலைவனைக் கோபுரத்தில் ஏற்றிவைப்பது, கூடாத செயல் எனவும் கண்டித்தார். அதற்கு தன்னையே உதாரணமாக்கிக் காட்டினார். "கடவுள் ஆக்கிடாதீர்கள்!"—என்று, போதித்தார். இவ்விதம் 'கடவுள்' ஆக்குவதால் ஏற்படும் ஆபத்துக்களை அவர் நன்கு அறிந்தவராதலால், மக்கள் மன்றத்தில் வெளியிட்டார். தலைவர்களின் தியாகத்தைக் கண்டு மகிழலாம்—போற்றலாம். ஆனால், 'அவர்களே தெய்வம்' எனக் கருதிக் கொண்டு விடுதல் தகாது—கூடாது. லெனின் தாங்கிய கஷ்டங்களைக் கண்டு அவரே ஞானபிதா என்று எண்ணி, மாஸ்கோ மக்கள் வீட்டிற்கொரு படத்தை மாட்டிக்கொண்டு, நிமிடத்துக்கொரு முறை அதை உச்சரித்துக்கொண்டேயிருந்திருப்பார்களானால் புது ரஷ்யாவை நாம் கண்டிருக்க முடியாது! அவர் காட்டிய வழிகளைப் பின்பற்றவேண்டும்—அந்த வழியில் நாட்டை நடத்திச் செல்லும் தலைவனிடம் அன்பும் மரியாதையும் வைக்க வேண்டும். அன்பு வேறு; பூஜா மனோபாவம் வேறு! கட்டுப்பாடு வேறு; கடவுள் என்று கும்பிடுவது வேறு! பூஜா மனோபாவம், மனிதனின் சிந்தனைகளைக் கொன்றுவிடும் அடிமையாக்கும். வளரும் உலகை பழைய நிலைக்குத் திருப்பிவிடும். "சரியா? தவறா?" என்று, யோசனை செய்யும் ஆற்றலைப பறிக்கும். "மணி மகுடங்கள் இனி நாடுகளை ஆளமுடியாது. மக்களின் எண்ணங்களே இனி ஆட்சி நடத்தும்" என்கிற ஜனநாயக யுகத்தில், இந்த பூஜா மனோபாவம் வளர்வது, சாயிபாபா சஞ்சரிக்கின்றாரே, அந்த நிலைக்குத்தான் அரசியலை இழுத்துச் செல்லும். சர்ச்சில், கடந்த உலகப் போரின்போது தேவைப்பட்டார்! ஆனால், போர் முடிந்ததும், 'தேவதூதா! உன் திருக்கிருபையால்தானே பிழைத்தோம். ஆகவே, இந்தா மணிமகுடம். சூட்டிக்கொள்" என்று இங்கிலாந்து மக்கள், கூறவில்லை. அட்லிதான் தேவைப்பட்டார்! இதனால், சர்ச்சில் மீது மக்கள் வெறுப்புக்கொண்டு விட்டார்கள் என்பதல்ல அவருடைய கட்சியைவிட, அட்லி தாங்கியிருக்கும் கட்சியின் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் தந்தனர் மக்கள். இதுதான், ஜனநாயகத்தின் உண்மை உருவமாகும்! இது போன்ற மனோபாவம் படைத்த நாடுகளிலே, இரத்தம்சிந்தும் புரட்சிகள் புகைந்து எழும்புவதுஎளிதல்ல. ஆனால், மக்களின் சிந்தனைக் கதவு மூடப்பட்டு, பூஜாமனோபாவம் மட்டுமே வளர்க்கப்படும் பூமிகளில் புரட்சிகள் நடப்பது எளிது! இலேசானது!! சியாங்கேஷேக்—சீனாவின் சிம்மமென உலவிய காலம் ஒன்று இருந்தது. அவன் திருநாமம் உச்சரிக்காத இடமில்லை! படங்கள் மாட்டப் பெறாத வீடுகள் இல்லை!! ஆனால், இன்று எங்கே அவன்? பூஜாமனோபாவத்தோடு போற்றித் துதித்த மக்கள், அவனது போக்கின் விசித்திரங்களைக் கண்டதும், புகையும் எரிமலையாயினர். இதுதான், பூஜா மனோபாவம், வளர்க்கப்படும் நாடுகளில் நடைபெறும் காட்சிகளாகும்! பூஜித்தான் — ஆனந்தன், பக்தி சிரத்தையோடு. ஆனால் பலன் கிடைக்கவில்லையென்றதும் அவன் எப்படி உருமாறினான் 'வேலைக்காரி' படத்தில். அந்த காட்சிகள், பூஜா மனோபாவம், நிரம்பிய இடங்களில் ஏற்படுவது — எளிது — சுலபம்; ஆனால் பயங்கரமானது.

ஆதிக்கத்தை வளர்த்து, மக்களை ஏமாற்ற விரும்புவோர், இந்த 'பூஜை ஆசை'யை வளர்ப்பர். "காளியைக் கும்பிடு— பூசைபோடு. காசுதா! உன் கஷ்டங்கள் நீங்கும்" என்று பூஜாரி சொல்கிறானே— அதன் பொருள் என்ன? காளியின் சக்தியைப்பற்றி அவன் பரப்பினால் தான் பக்தர்கள் வருவர்! காசு குவியும்!! இந்தப் பூஜாரி வேலையைத் தான், இந்த இன்ப பூமியில், ஆதிகாலத்தில் வந்த ஆரிய மதத்தவர் பரப்பினார்கள். "ஐயனை வணங்கு அஷ்ட ஐசுவரியம் பெருகும்" என்றார்கள், தத்தமது சித்தத்தில் தோன்றிய தெய்வங்களை யெல்லாம் நடமாடச் செய்தார்கள் — மனிதனின் பகுத்தறிவைக் கொன்றார்கள். இந்த பூஜாரி மனோபாவம், பூசாரத் தலைவர்கள் கண்டுபிடித்து வரும், நஞ்சு தடவிய கனியாகும். இந்தக் கனியைக் காட்டி, தமது கொடியை நாட்டினர் முன்பு! வீரமிகுந்த சந்திரகுப்தனை வீழ்த்தினான், தன் காலடிகளில் சாணக்யன்!! பலப்பல மணிமகுடங்களைச் சாய்த்தது, முப்புரி நூலணிந்த கும்பல். இந்த மூடமதியை முதலாக வைத்து வியாபாரம் நடத்தும் ஆசை, இந்தப் புதயுகத்திலும், மறைந்துவிடவில்லை, அவர்களுக்கு. பூஜாமனோபாவத்தை வளர்ப்பது, ஒரு கல்லில் இரண்டு காய்களை விழச் செய்வதாகும். மக்களின் சிந்தனையைப் பறிப்பது! தமக்கு வேண்டிய சுகபோகங்களை இழக்காமல் பாதுகாத்துக்கொள்வது!! — இந்த இரு கெடுமதிகளையும் உணர்ந்ததாலும், புதுயுகத்தின் போக்கினை நன்கு அறிந்ததாலுமே, பண்டிதநேரு கண்டித்தார் இதனை. தீதுபயக்கும் என்று செப்பினார். ஆபத்தானது என்று எச்சரித்தார். ஆனால், இங்குள்ள ஆச்சாரியார் அவர்களோ, அண்மையில், சென்னையில் பேசியிருக்கிறார் ஒரு கூட்டத்தில். நடைபெறவிருக்கும் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் காங்கிரசுக்கு வாக்களிக்குமாறு மக்களைக் கேட்டுக்கொண்டு பேசிய நேரத்தில, அவர் கூறிய வாசகம், என்ன தெரியுமா? காங்கிரசைப்பற்றி பேசவில்லை! அதன் திட்டங்களைப்பற்றி செப்பவில்லை! கொள்கைகளைக் குறித்து விளக்கவில்லை! நேருவைக் காட்டியிருக்கிறார் — "யார் காங்கிரசின, தலைவர். நேரு—அவரை நினைத்துக்கொண்டு, காங்கிரசுக்கே வோட்போடுங்கள்" என்று பேசியிருக்கிறார்.

பூஜாமனோபாவத்தை நேரு கண்டித்தார்! இவர் வளர்க்கிறார்!! நேரு வடநாட்டுக்காரர் — இவர் இங்கேயிருப்பவர். இவர், அவரைக்காட்டுகிறார் — 'அவருக்காக' வோட் போடுங்கள் என்கிறார். அரசியல் நாணயம் அறியாதவரல்ல ஆச்சாரியார். பூஜாமனோபாவத்தால் வரும் தீமைகளை நன்றாக அறிவார். தெளிவாகத் தெரிகின்ற காரணத்தாலேயே, இந்த வார்த்தைகளைக் கூறுகிறார். பூஜாமனோபாவத்தால் உயர்ந்த பூசுர இனத்தின் காவலர் என்பதைக் காட்டிக் கொள்கிறார்! எவ்வளவு பயங்கரம் பாருங்கள்!!

★

## கூட்டுறவு!

பிரஜாகட்சியும் சோஷியலிஸ்டு கட்சியும் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுவதென முடிவு செய்திருக்கிறது. சென்னை சட்டசபைக்குள் மட்டும் பிரஜாகட்சி, கம்யூனிஸ்டுத் தொடர்பை வைத்துக்கொள்ளுமாம். ஆனால் 'சோஷியலிஸ்டுகளுடன் சேர்வது எங்களுக்குப் பிடிக்கவில்லை' என்று தமிழ்நாட்டு பிரஜா கட்சிகூடி, நிராகரித்து விட்டதாம்.

# ‘சீனாவைப் பார்!’

“செஞ்சீனாவைப் பார்!” என்று கூறும்போது, ‘சிவப்பு’ என்கிற வார்த்தையைக் கண்டு மிரண்டு, அதன் காரணமாக, இதயத்தில் எழும்பும் வெறுப்பை வீசும் நண்பர் குழாம் நமது நாட்டில் அதிகம் உண்டு. அடிமைப்பட்டு விடுதலை பெற்று புது ஒளி காணத்தவிக்கும் ஒரு தேசம், பக்கத்து நாடுகளில் சமீபகாலங்களில் ஏற்பட்ட மாறுதலைக் கண்டு, அவைகளைப் பரிசீலனை செய்யவேண்டும். பிறநாடுகளைவிட, சீனநாட்டுக்கும் இந்திய துணைக் கண்டத்துக்கும் பல வழிகளில் ஒற்றுமைகள் உண்டு. இரண்டும் மூடநம்பிக்கைகள் மலிந்த நாடுகள்! இங்குள்ளதுபோலவே அங்கும் பழமைமோகம் அதிகம் உண்டு! விவசாயம் — தொழில்வளம்—சமுதாயம் — எல்லாத் துறைகளிலும் இங்கு நிலவுகிற அளவு பேதங்களும் உயர்வு தாழ்வுகளும் உள்ள பூமி, அது. அங்கே, மாசேதுங் சர்க்கார் மகத்தான மாறுதல்களைச்செய்துள்ளார்கள். அதை நேரில் கண்டு வந்த ராஜ்சாவ்லா என்பார் ‘இந்து’ இதழிலே இரண்டு கட்டுரைகள் வரைந்துள்ளார். புது சீனா தனது பிரச்னைகளை எவ்விதம் தீர்க்கமுயல்கிறது என்பதைக்கூர்ந்து கவனிக்குமாறு, வாசகத்தோழர்களைக் கேட்டுக்கொள்கிறோம்—சற்றேறக் குறைய அதே பிரச்னைகளை நாமும் வைத்துக்கொண்டிருப்பதால். சீனாதனது தொல்லைகளை ‘ரஷ்யமாடலில்’ தீர்த்துக்கொண்டது என்று, ரஷ்யாஎன்றால் ஏதோ ஒரு ‘பூதம்’ என்னும் எண்ணத்தில் கூறுவோரும் உண்டு. அவர்களும் சிந்தை தெளிவு பெறலாம்—சீனாவின் சாதனைகளை அறிந்தால். சீனா, ரஷ்யாவுடன் உறவு கொண்டாடும் நாடு—ஆகவே ரஷ்ய உதவி நிறைய கிடைத்திருக்கும் என்று கூறலாம். அந்தக்கூற்றையும், இந்தக் கட்டுரையாளர், தாம் நேரில் கண்ட காட்சிமூலம் மறுத்துள்ளார். ராஜ்சாவ்லா ‘சிவப்பு’ கட்சிக்காரரல்ல; அதனால்தான் அவரது கட்டுரை ‘இந்து’விலே வந்திருக்கிறது! இதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு, சீனாவின் சாதனைகளைப்படியுங்கள். பழையபாதையை விட்டு புதுப்பாதை நோக்கிச் செல்லும் அதனுடைய நடவடிக்கைகள், புதுயுகம் காண உழைப்போர், கூர்ந்து கவனிக்கவேண்டியவைகளாகும்:—

## இன்றுள்ள நிலை

சியாங்கேய்ஷேக் ஆட்சியில் ஊழல்கள் மலிந்து சீர்கெட்டுக் கிடந்த சீனாவில், இன்று பொதுவுடைமைக் கொள்கைகள் பரவிவருகின்றன. அது, ரஷ்யா சென்ற பாதையை மனதில் வைத்து நடக்கிறது; ஆனால், ரஷ்யாகட்டளையிட்டு தனது காரியங்களைக் கவனிக்கவில்லை. புதுசீனத் தலைவர்கள், தமது எண்ணத்தின்படி, ஆட்சிமுறைகளை வகுத்து நடத்தி வருகிறார்கள். சாதாரண சீனப்பிரஜை, மகிழ்வோடு உலவுகிறான்! கொடுமை இல்லை இப்போது—பழமை, அவன் இதயத்தைவிட்டு, அறவே அகன்றுவிடவில்லை. ஆனாலும் ‘மார்க்ஸ்’ பற்றிய சிந்தனை, ஆங்காங்கும், பரவி வருகிறது.

## ரஷ்யர்கள்

8000 ரஷ்யர்கள், புதுசீனாவில், உலவிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் தொழிலாளர்கள்தான். புதிய திட்டங்களை நிறைவேற்றிக் காட்டுவதற்காக, சீனசர்க்காரால், விரும்பி அழைக்கப்பட்டவர்கள். தமது வேலை முடிந்ததும், ஒவ்வொரு பிரிவினராக, திரும்புவதும் பதிலாகமற்றோர் குழு வருவதும், தொடர்ந்துநடைபெற்று வருகிறது. ரஷ்ய ஸ்தானீகர் அலுவலகத்துக்கென எவ்வித தனிச் சலுகையும் கிடையாது.

## கல்வி

பணக்காரனுக்கும், வசதிபடைத்தோருக்குமே ‘கல்வி’ என்ற நிலை, இல்லை. பெருங்குடும்பத்தில் பிறந்த குழந்தைகளே கல்விக்கூடம் செல்ல முடியும் என்ற கொடுமை முடிவு கட்டப்பட்டு விட்டது. ஏழை பணக்காரன் எல்லோரும் படிக்கலாம்! பட்டம் பெறலாம்! ஆண் பெண் என்ற வேற்றுமையின்றி, எந்தப்படிப்பையும் கற்கலாம். ஆண்களைப்போலவே பெண்களுக்கும் எல்லாவித உரிமைகளும் உண்டு. சீனமொழிக்கே, கல்விக்கூடங்களில் முதலிடம்.

## விவசாயம்

ஆண்டாண்டுகாலமாக இருந்து வரும் நிலமான்ய முறை குழி தோண்டி புதைக்கப்பட்டுவிட்டது. நூற்றுக்கு எண்பதுபேர் விவசாயிகள்; எனவே விவசாயிகள் துயர் களையாத வரையில் கதிமோட்சமில்லை என்பதை மாசேதுங் சர்க்கார் உணர்ந்து கொண்டுவிட்டது. சீனாவின் விவசாய நிலங்கள் யாவும் நூற்றில் பத்துபேராக உள்ள சிறு கும்பல் கையிலேயே சிக்கியிருந்ததால், சீனசர்க்கார் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. நிலப்பிரபுக்களிடமிருந்து பூமியைப் பறித்து நிலமில்லா ஏழை குடியானவர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது. இதனால், நிலப்பிரபுத்துவம், ஒழிக்கப்பட்டுவிட்டது. இதற்கான நஷ்டஈடு எதுவும் தரமறுத்துவிட்டது.

[தஞ்சை மாவட்டத்தைப் போலவே, அங்கும் விவசாயத் துறையில் பல பிரிவுகளுண்டு—நிலப்பிரபுக்கள், மிராசுதார்கள், விவசாயிகள், உழைப்போர் என்பதாக.] நிலப்பிரபுக்கள்:- ஏராளமான பூமிக்குச் சொந்தமானவர்கள். நிலம் இருக்குமிடங்கள்கூட அவர்களுக்குச் சரியாகத் தெரியாது. குத்தகைக்கு நிலத்தைவிட்டு, கணக்கப்பிள்ளைகள் மூலம் வருமானத்தைவசூல் செய்துகொள்பவர்கள். மிராசுதாரர்கள்:- தலையாரிகளையும், நூற்றுக்கணக்கான தொழிலாளர்களையும் வைத்துக்கொண்டு சாகுபடி செய்பவர்கள். இவர்களுக்கும் ஏராளமான நிலம் உண்டு. ஆனால், இவர்களுக்கு நிலம் இருக்குமிடமும் வேலை செய்வோரும் தெரியும். விவசாயிகள்: சிறுசிறு நிலத்துக்குச் சொந்தக்காரர்கள். குத்தகைக்கு நிலம் வாங்கி, தமது நிலத்தோடு, தாமே ஏர்பிடித்து உழைப்போர். உழைப்போர்: அடிமையாக இருந்து கூலிக்கு வேலைசெய்பவர்கள்.

இவ்வளவு பிரிவுகள் கிடந்த அந்தப் பூமியில் இன்று பேதங்கள் ஒழிக்கப்பட்டுவிட்டன. போக போக்கியத்தோடு வாழ்ந்த நிலப்பிரபுக்கள் இன்று இல்லை! இந்த நிலச் சீர்திருத்தத்தை எதிர்த்த நிலப்பிரபுக்களிடமிருந்து, பலவந்தமாக, நிலம் பறிமுதல் செய்யப்பட்டது. நிலங்களில் அட்டகாசம் செய்து குடியானவர்களைப் பழிவாங்கியோரின் ‘அனுபோக பாத்யதை’ பறிக்கப்பட்டது. ஆனால், அந்த நிலப்பிரபுக்களின் குடும்பத்தாருக்கு, எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுத்த அளவு நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலச் சீர்திருத்தத்துக்குப்பின், விளைச்சல் அதிகமாகியிருக்கிறது.

## தொழில் வளம்

மிகப் பெரும்பாலான தொழில்கள், சர்க்காராலேயே நிர்வாகம் செய்யப்படுகின்றன. எனினும் சில தனிப்பட்டவர்கள் இல்லாமலில்லை. ஆனால் அவர்கள் அரசாங்கத்தின் பார்வைக்குக் கீழேதான் இருக்க முடிகிறது. அந்நிய மூலதனக்காரர்கள், சர்க்காரின் தலையீடு பொறுக்காமல், கம்பெனிகளை மூடிவிட்டுப் போக முடியாது. அதே நேரத்தில் சர்க்காரின் தலையீடுகளை தவிர்க்கவும் இயலாது. லாபவேட்டை ஆட முடியாது, அந்நிய மூலதனக்காரர்கள், இருக்கிறார்கள். தொழில் வளத்தில் இன்னும் முன்னேற வேண்டியிருப்பதால், சீன சர்க்கார் இவைகளை கைப்பற்றவில்லை. சர்க்காரே பல சிறு தொழிற்சாலைகளை மேற்கொண்டுள்ளனர். பெரிய ஆலைகளை உடனடியாக அவர்கள் ஆரம்பிக்க விரும்பவில்லை. ஏனெனில் அவைகளுக்குத் தேவையான பொருள்களை வேறு நாடுகளிலிருந்து வாங்க விரும்பவில்லை. ரஷ்யாவிடமிருந்து கூட, அந்தச் சலுகையைப் பெற சீன சர்க்கார் விரும்பவில்லை—‘தன் கையே தனக்குதவி’ என்பதே தங்கள் விருப்பம் என்று, நான் சந்தித்த ஒருவர் கூறினார்.

## பொருளாதாரம்

வெளிநாட்டினர் கண்டு எள்ளி நகையாடக் கூடிய நிலையிலிருந்த சீனாவின் பொருளாதார நிலை இன்று ஸ்திரமாக இருப்பதைக் காணும்போது திகைப்பாக இருக்கிறது. “இஷ்டம் போல் வியாபாரம் செய்ய அனுமதிப்பதில்லை” என்னும் முடிவு மூலம், இந்தக் காரியத்தை சாதித்திருக்கிறார்கள். உள்நாட்டுக்குள் வாங்குவதும் விற்பதும்எல்லாம் ‘கரன்சி’செலாவாணி மூலமே. வெளிநாட்டு வியாபாரம் யாவும் சீனப் பாங்கியின் மூலமே நடைபெறுகிறது. இதனால், உள்நாட்டில் பணப்புழக்கம் ஏற்படாமல் தடுக்கப் பெறுகிறது.

## மக்கள் கழகம்

புதிய முறையில் கட்டப்பட்டு வரும் சீனாவின் எதிர்காலத்தை நிர்மாணிக்கவேண்டிய பொறுப்பு இளைஞர்களுடையதல்லவா? அவர்களை, எதிர்காலச் சிற்பிகளாக ஆக்கும் நோக்கத்துடன் “மக்கள் பல்கலைக் கழகம்” ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. கம்யூனிஸ்டுக் கட்சித் தொண்டர்கள், முன்னணி வீரர்கள் ஆகியோருக்கு இங்கு பயிற்சி தரப்படுகிறது. 25 வயதிலிருந்து 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் இங்கே பயிலுகின்றனர். பிரச்சாரகர்கள், தொண்டர்கள் யாவருக்கும் இங்கு 18 மாத கால பயிற்சி கொடுக்கப்படுகிறது. இவர்களது பாடப் புத்தகங்கள் பெரும்பாலும் மாசேதுங் எழுதியவைகள்தான். சமுதாயத் தொண்டு, நிர்வாக விவரங்கள் யாவும் இங்கு கற்றுத்தரப்படுகின்றன. இந்தப் பல்கலைக் கழகம் எதிர்காலச் சிற்பிகளின் உலைக்கூடமாகும்! எதிர்கால சீனா, இவர்களைத்தான் நம்பியிருக்கிறது!!

## இளைஞர்கள் சேவை

“45 வயதுக்குக் கீழ் எவருக்கும் பெரிய உத்யோகங்கள் தரக்கூடாது?” என்பது சீனாவின் தொன்றுதொட்ட கொள்கையாகும். ஆனால், இப்போது முக்கிய ஸ்தானங்களில் பல இளைஞர்களே அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இவர்களின் நிர்வாகத் திறமையைக் காணும்போது பிரமிப்பாயிருக்கிறது!

★

# அவர்கள் கூறுவது

அகில இந்திய மொழிவாரி மாகாண மாநாட்டின் விஷயாலோசனைக் கமிட்டி, அமராவதி நகரில், கடந்த 16-ந்தேதியன்று கூடியிருக்கிறது.

தீர்மானங்கள் பற்றி ஆலோசிக்கக் கூடிய அந்தக் கூட்டத்தில், டாக்டர் என். பி. காரே, மொழிவாரி மாகாணம் சம்பந்தமாக, தனது கருத்தை விளக்கியிருக்கிறார். டாக்டர் காரே, இந்துமகாசபைக்காரர்.

பிற கட்சியினரைவிட, ‘இந்து’ என்கிற சொல்லுக்கு இம்மியும் ஆபத்து வரக்கூடாதென்பதில் அதிகசிரத்தை கொண்டவர். அவர் கூறுகிறார்:

“மொழிவாரி மாகாணப் பிரிவினை மத்தியசர்க்காரைத்தான் பலமுள்ளதாகச் செய்யும். பலதரப்பட்ட மாகாணங்கள் இருப்பதற்குப் பதில் தேசத்தை, பெரிய மொழிகளின் அடிப்படையில் பிரித்துவிடலாம. இது செலவையும் நிர்வாகப் பொறுப்பையும் குறைக்கும்.”

திராவிட மொழியின் அடிப்படையில் பிரிவினை கூடாது என்று வாதாடும் தோழர்களே, சிந்தியுங்கள்! மொழிவாரி மாகாணம், பலம் பொருந்திய மத்யசர்க்காரைத்தான் உருவாக்கும். காரே சொல்கிறார். அகண்ட இந்து சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கும் ஆசை கொண்டவர், செப்புகிறார்.

* * *

“திராவிடமாவது! திராவிடராவது!!” என்று, செப்புகிறார்கள், தேசியத் திருவாளர்கள். ஆனால், அகமதாபாத்தில், ஆக-18-ந்தேதி பேசிய பார்லிமெண்டு மேல்சபை மெம்பர் பேராசிரியர் ஆர். எஸ். தின்கர் கூறுகிறார். அவர் கூறிய இடம், ராஷ்டிரபாஷா பிரச்சார சமிதி! அவரும் ஒரு தேசியப் பிரமுகர்தான். அவர், ‘திராவிடர்கள்’ என்பதை உணர்ந்து, உரைக்கிறார். “இந்து கலாச்சாரம் சிறந்து பரிணமிக்க திராவிடர்கள் ‘மிகப் பெருத்த மூலபாடங்களை’த் தந்துள்ளார்கள். தெற்கு, நமது புராதன கலாசாரத்தின் கோட்டை. கலாச்சாரத்தில் சிறந்து விளங்கும் தென்னாட்டின் தலைமையை ஏற்றுக்கொள்ள நாம் பெருமிதப்படவேண்டும்.” அவர் பேசிய இந்தி பட்டமளிப்பு விழாவுக்கு தலைமை தாங்கியவர் குஜராத் பல்கலைக்கழக துணைவேந்தராகும்.

* * *

“நமது புராதனச் சிற்பக் கலை நசிந்து போய்க் கொண்டிருக்கும், தாராசுரம் போன்ற கோயில்களைக் காணும் போது, இந்திய சர்க்காரின் புதை பொருள் ஆராய்ச்சி இலாக்கா, எவ்வளவு தூரம் தென்னாட்டைப் புறக்கணிக்கிறது என்பதை எவரும் நினைக்காமலிருக்க முடியாது” என்று எம். கே. ரங்கசாமி அய்யங்கார், 17ந்தேதி ‘இந்து’ இதழில் எழுதுகிறார்.

★

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at “Dravida Nadu” Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.